**R5333** GOD BURIED MOSES, HIS SERVANT

# தேவன் அவரது ஊழியக்காரன் மோசேயை அடக்கம் பண்ணினார்

உபாகமம் 34:1-12

“கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.”–சங்கீதம் 116:15

மோசே, சரித்திர ஏடுகளில் உன்னதமான குணலட்சணம் உடைவர்களில் ஒருவராக இருக்கிறார். அவரது உயர் பண்பு அவரை ஒரு பெரும் தேசபக்தனாக, அவரது ஜனங்களின் தலைவனாக, நியாயாதிபதியாக, ஆளுனராக காண்பிக்கிறது. இன்னும் தேவனிடத்தில் உள்ள அவரது உறவில் இன்னும் மேலானவராக காணப்படுகிறார். அவர் யேகோவாவின் ஊழியனாக, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் போன்ற மனிதப் பண்புகளை உடையவராக இருந்தார். அவர் இதில் “மோசேயை காட்டிலும் பெரியவரான” மேசியாவை நிழலாகக் காண்பிக்கிறார். நாம் வாசிப்பதாவது: “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்.” (உபாகமம் 18:15) இஸ்ரயேலின் உண்மையான மீட்பராகவும் உலகத்தை சாத்தான், பாவம் மற்றும் மரணத்திலிருந்து மீட்பவராகவும் இருக்கும்படி யேகோவா அபிஷேகம் பண்ணப்போகிற மகா போதகர், தலைவர் மற்றும் ராஜாவுக்கு பிரதிநிதியாக அல்லது மிகச்சிறிய படமாக நான் இருக்கிறேன். (எபிரேயர் 2:14,15)

பதிவுகளிலிருந்து மோசேயின் மேன்மையை யாரும் பகுத்துணரலாம். பார்வோனின் அரண்மனையை விட்டுவிட்டு, யூத தேசத்தோடு, தன் சகோதரர்களோடு சேர்ந்து கொண்டு, அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் செல்லும் தலைவனாக ஆவதற்கு எவ்வளவு பெரிய தேசபக்தி தேவைப்படும் என்பதை யாரும் தெரிந்துகொள்ளலாம். அவரது ஜனங்களின் மத்தியஸ்தராக, தேசத்தை அழித்துப்போட்டு, அவரையும் அவரது குடும்பத்தையும் வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கும் தேவனுடைய திட்டத்தை மறுத்து, அவர்களது மீறுதல்களை மன்னிக்கும்படி வேண்டின அந்த மனிதனுடைய தேச பக்தியை யாரும் அறிந்துகொள்ள முடியும். மோசேயினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த பொறுப்பிற்கு தேவனிடத்தில் மாபெரும் விசுவாசம் தேவை என்பதை எவரும் காணக்கூடும். ஆனால் சிலர் மட்டுமே மோசேயின் குணலட்சணத்தை காண்கின்றனர். ஏனெனில் உண்மையான நிலைமையையும், இஸ்ரயேல் தேசத்திற்கான தெய்வீக அழைப்பையும், அவர்களது மத்தியஸ்தராக மோசேயின் வேலையையும் ஒரு சிலரே உணர்ந்து கொண்டனர்.

## தேவனுடைய ஊழியக்காரன், மோசே

“பூமியிலேயே மிகுந்த சாந்த குணமுள்ள மனிதன்,” தேவனுடைய இந்த உயர்ந்த ஊழியத்தின் மேல் நம்மால் பரிதாபம் கொள்ளாமல் இருக்க முடியாது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட காரணத்தினால், ஒரு தண்டனையாக, அவருடைய ஜனங்களுடன் கானானுக்குள் நுழைவதை தடை செய்யப்பட்ட, இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களுக்கு ஒரு பிரதிநிதியாக, ஒரு நிழலாக வைக்கப்பட்டார். அநேக வருடங்களின் பொறுமை, நீடிய பொறுமை மற்றும் தேவனிடம் விசுவாசம் ஆகியவற்றிற்கு பிறகு, பாதுகாப்பற்ற ஒரு கணத்தில் இஸ்ரயேலின் மாபெரும் மத்தியஸ்தர் சாந்தம் மற்றும் விசுவாசத்தில் தோல்வியடைந்தார். கர்த்தரால் பாறையுடன் பேசும்படி கட்டளையிடப்பட்டார். முந்திய சந்தர்ப்பத்தில் பாறையை அடித்தது போல இரண்டாவது தடவையும் பொறுமையின்றி அவர் அடித்து கூறியதாவது: “கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமா?”

பாறையானது ஜீவத்தண்ணீரைக் கொடுக்கக்கூடிய யுகத்தின் பாறையாகிய மேசியாவை குறிப்பிட்டது. அவர் இன்னொரு முறை அடிக்கப்பட்டார். (எபிரேயர் 6:6ஐ பார்க்கவும்)

இரண்டாம் மரண வகுப்பினருக்கு அடையாளமாக பயன்படுத்தப்பட்ட மோசே இரண்டாம் மரணத்தை அனுபவித்தார் என்றோ, தெய்வீக கிருபையிலிருந்து தன்னை துண்டித்துக் கொண்டார் என்றோ அர்த்தப்படாது. அவர் கானானுக்குள் நுழைய மாட்டார், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் நுழையமாட்டார் என்ற தண்டனை நிழலான சித்திரத்தை நிறைவு செய்ய மட்டுமே உதவியது.

## கானான் பிஸ்கா மலையிலிருந்து பார்க்கப்பட்டது

பிஸ்கா என்பது நெபோ மலையின் சிகரங்களில் ஒன்று. அதிலிருந்து மோசே, எண்பது வருடங்களாக தனது விசுவாசக் கண்களால் பார்த்துக்கொண்டிருந்த, அதற்காக கடந்த நாற்பது வருடங்கள் இஸ்ராயேல் ஜாதியினரை கஷ்டப்பட்டு வழிநடத்திய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை ஒரு கணம் பார்த்தார். இந்த மகத்தான வயதான தேவனுடைய ஊழியக்காரன் தெய்வீக சித்தம் மற்றும் ஏற்பாடுகளிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டு, அவர் ஊழியம் செய்த கர்த்தரால் நித்திரைக்குள் வைக்கப்பட்டார். தேவன் அங்கே அவரை முத்தமிட்டார் என்ற பழமொழியை யூதர்கள் கொண்டிருந்தார்கள். அவர் வைத்த கல்லறை மறைக்கப்பட்டது. சந்தேகத்திற்கிடமின்றி விக்கிரகாராதனை என்கிறதை தடுப்பதற்கு இப்படி செய்யப்பட்டது. மோசேயின் சரீரத்தை எடுத்துக்கொள்ளத் தக்கதாக சாத்தான் முயற்சித்தான் என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது. சந்தேகத்திற்கிடமில்லாமல் இது அதை வைத்து விக்கிரக ஆராதனை ஏற்படுத்தவே ஆகும். ஆனால் யேகோவா அதை தடுத்துவிட்டார்.

## மோசே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார்

மோசே மரித்தார், தேவனால் குறிப்பிடப்பட்ட காலம் வரை அவர் வாழமாட்டார் என்பதையும், மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் அவர் உயிர்த்தெழுப்பப்படுவார் என்பதையும் நாம் கவனிக்காமல் விடக்கூடாது. இதற்கிடையில் வேதாகமத்தில் சகல மரித்தவர்களைப் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளபடி அவர் தமது பிதாக்களோடே நித்திரையிலிருக்கிறார்.

மோசே மரித்தார் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதே மரித்தவர்களின் ஒரே நம்பிக்கையாக இருக்கிறது என்பதோடு, நமது கர்த்தர் மலையில் தமது மறுரூபக்காட்சியில் மோசே மற்றும் எலியாவுடன் தோன்றியதை முரண்படுத்தக்கூடாது. (1கொரிந்தியர் 15:13, 14) மோசேயோ எலியாவோ பரலோகத்திற்கு செல்லவில்லை என்பதற்கு இயேசு சொன்ன வார்த்தையே நமக்கு இருக்கிறது. அவர் கூறியதாவது: ''பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை.'' (யோவான் 3:13) வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட எக்காளம், மிருகம் முதலானவை உண்மையாயில்லாமல் தரிசனமாக இருப்பது போல, சீஷர்கள் மலையில் பார்த்தது உண்மையல்ல. அது ஒரு தரிசனம் என்று இயேசு விளக்கினார். ''இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்.'' (மத்தேயு 17:9) பரிசுத்த பேதுரு இது குறித்து சாட்சி கூறும் போது, அது மேசியாவின் இராஜ்யத்தை குறித்ததாக அறிவித்தார். (2பேதுரு 1:16-18) மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் இயேசுவோடு பங்கு பெறப்போகிற ஒரு வகுப்பாரை மோசேயும் இன்னொரு வகுப்பாரை எலியாவும் குறிப்பிட்டார்கள். இந்த ராஜ்யம், பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு, உலகத்தை ஆசீர்வதித்து, தீமைகளை சரிப்படுத்தி, தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யபடும்படி செய்யும்.

## ஆபிரகாமுக்கு தேவனுடைய வாக்குத்தத்தம்

மாம்சீக இஸ்ரயேலரோடும், ஆவிக்குரிய இஸ்ரயேலரோடும் தேவனுடைய அனைத்து தொடர்புகளுக்கும், ''பூமியுள்ள சகல வம்சங்களும் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் ஆசீர்வதிக்கப்படும்'' என்ற ஆணையுடன் இணைந்த ஆபிரகாமுக்கு கொடுத்த அவரது மாபெரும் வாக்குத்தத்தத்தின் அடிப்படையிலானதாகும்.

மரண சாபமானது மனுக்குலத்தின் மேல் நித்திய சாபமாக இருக்கக்கூடாது என்று மிகவும் ஆரம்பத்திலிருந்தே தேவன் நோக்கங்கொண்டிருந்தார். வியாதி, துக்கம் மற்றும் வலியை நீக்கிப்போடவும், சாபத்தை நீக்கிப்போடும் காலம் வரும் என்பதையும் அவர் ஆரம்பத்திலிருந்தே திட்டங்கொண்டிருந்தார். தேவாட்டுக்குட்டியை அனுப்பவும், அதன் மூலம் உலகத்தின் சாபத்தை நீக்கி அதற்கு பதிலாக மனுக்குலத்திற்கு ஆசீர்வாதத்தை கொண்டு வரவும் ஆதியிலே முன்னேற்பாடு செய்திருந்தார். இந்த தெய்வீக நோக்கத்தைப் பற்றிய முதலாவது வெளியான அறிவிப்பு ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டது. அதாவது அவரும் அவரது சந்ததியும் மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிக்கும் மாபெரும் வேலையில் தேவனோடு இணைந்திருக்க வேண்டும் என்பது.

மானிட வம்சத்தில் எந்த ஒரு அங்கமும் தெய்வீக கட்டளையை பூரணமாக கைக்கொள்ள முடியாது என்பதை தேவன் அறிவார் எனினும் இந்த காரியம் உதாரணமாக இருக்கும்படி வைக்கப்பட்டது. எனினும் மேசியாவின் ஆசீர்வாதத்தை கொண்டுவர தேவன் ஆயத்தமாகும் முன்பே, அவர் யாக்கோபு மூலம் ஆபிரகாமின் சந்ததிக்கு ஒரு உறுதிமொழியை செய்தார். அதாவது தெய்வீக கட்டளையை கடைபிடிப்பதின் மூலம் அவர்களது விசுவாசத்தைக் காண்பித்தால், சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக அவர்களை பயன்படுத்த தேவன் தயாராயிருந்தார் என்பதாகும். நியாயப்பிரமாணத்தின் இஸ்ரயேலரின் பதினாறு நூற்றாண்டு கால முயற்சியை ஒன்றாக சேர்த்து பரிசுத்த பவுல் கூறுவதாவது: ''எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.'' (ரோமர் 3:20)

## சந்ததியை தயார்படுத்துதல்

இது மேசியாவின் காலத்திற்கு அழைத்துச்சென்றது. லோகோஸ், ஒரு விசேஷித்த பிறப்பின் மூலமாக இயேசுவாகி, தெய்வீக முன்னறிவுக்கு இசைவாக தன் ஜீவனை பலியாகக் கொடுத்தார். இப்படிப்பட்ட இருதயத்தில் பரிசுத்தமான சுபாவ இஸ்ரயேலர்கள், அவருடைய சீஷர்களாக, அவரது பாடுகளிலும் மரணத்திலும் பங்கு பெறவும், அவரது மகிமையிலும் தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படுதலிலும் பங்கு பெறுகிறவர்களாக ஆக்கப்படவும், அவரிடத்தில் கூட்டி சேர்க்கப்பட்டார்கள். இந்த தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இயேசுவுடன் உண்மையான மோசேயை அமைக்கிறார்கள். இதன் முடிவில் தீர்க்கதரிசி மோசேயைப் போல அவர்களது சகோதரரிலிருந்து எழுப்பப்பட்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்ட ''உத்தம இஸ்ரயேலர்கள்'' போதுமானவர்களாகக் காணப்படாததால், தெய்வீக ஞானம் புறஜாதிகளிலிருந்து, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலுமிருந்தும் இந்த யுகம் முழுவதும் அழைக்கப்பட்டும் தெரிந்து கொள்ளப்பட்டு கொண்டும் வருகிறார்கள்.

மேசியாவின் ராஜ்யத்தின் ஆயிரம் வருடத்தில் தேவனுக்கும் அவரிடத்தில் இழுக்கப்பட்டு அவரது ஆசீர்வாதத்தை பெற விரும்புகிற அனைவருக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்கப்போகிற மகா தீர்க்கதரிசியை, ஆசாரியரை, ராஜாவை, நியாயாதிபதியை தேவன் இப்படியாக படிப்படியாக தயார்படுத்திக் கொண்டு வருகிறார். இஸ்ரயேலின் ஆசாரியர்கள் அவர்களது தேசத்தோடு தொடர்புடையவர்களாக இருந்ததைப் போல இவர்கள் மனந்திரும்புகிற உலகத்தோடு தொடர்புடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களது உழைப்பு பயனுள்ளதாக இருக்கும், தோல்வியாக இருக்காது; ஏனெனில் அது பாவங்களுக்கான மேலான பலிகளின் அடிப்படையிலிருக்கும். (எபிரேயர் 9:23) ஆகையால் பாவங்களை மன்னிப்பதிலும் விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களை பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவும் தேவனுடைய பிள்ளைகளின் மகிமையான சுயாதீனத்தில் நுழைவதிலும் தெய்வீக வல்லமையினால் ஆதரிக்கப்பட்டது. இந்த மாபெரும் உண்மைப்பொருள் நமக்கு முன்னே இருந்து, சீக்கிரத்தில் அதன் மகிமையான நிறைவேறுதலைப் பெறும் என்று நாம் நம்புகிறோம்.

இப்படியாக தேவன் தயார்படுத்திக் கொண்டிருக்கிற மேசியா, தலையாகிய இயேசுவையும், மேசியாவின் சரீரமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரயேலர்கள் மற்றும் அகில உலகத்தாரையும் உடையவர்களாயிருப்பார். அவர்கள் நிழலில் உள்ளது போல தேவனுடனும் உலகத்ததாருடனும் உண்மையுடனும் விசுவாசத்துடனும் பற்றுடனும் இருப்பார்கள். உண்மையிலேயே இது, சகோதரர்களுக்காக தங்களது ஜீவனையும் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பார்களா மற்றும் தெய்வீக குணலட்சணத்தின் கொள்கைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பார்களா என்பதற்கான சோதனைகளில் ஒன்றாக இருக்கும்.

## இஸ்ரயேலர்களுக்கு மோசேயின் செய்தி

உபாகமம் புத்தகம் பொதுவாக மோசே இஸ்ரயேலருக்கு தனது மரண காலத்தில் கொடுத்த செய்திகள் அடங்கியதாக இருக்கிறது. அவரது மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது. அவரது அறிவுரை அதிகாரம் 1:6 இல் ஆரம்பித்து அதிகாரம் 4:40இல் முடிவடைகிறது.

இரண்டாவது அறிவுரை அதிகாரம் 5இல் ஆரம்பித்து அதிகாரம் 26இன் முடிவில் முடிவடைகிறது.

மூன்றாவது செய்தி, அதிகாரங்கள் 27,28.

நான்காவது செய்தி, உடன்படிக்கையை உறுதிப்படுத்துதல், அதிகாரம் 29 மற்றும் 30.

யோசுவா, மோசேயின் வாரிசாக நியமிக்கப்படுவது, அதிகாரம் 31:1-8.

மோசேயின் பாட்டு, அதிகாரம் 32 “இஸ்ரயேலின் கன்மலை” அவரது அழைப்பாணை வந்த முதல் நாள் செய்தி.

அதே நாளில், கோத்திரங்களை ஆசீர்வதிப்பது, அதிகாரம் 33.

இந்த சொற்பொழிவுகளின் ஒழுங்கு, தேவனிடத்தில் நம்பிக்கையாக, வாக்குத்தத்தங்களில் விசுவாசமாக, அவர்களது உடன்படிக்கைக்கு உண்மையாக இருந்தது.